# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2019 மேழம் (15-5-1988) ஓர் உருபா (இதழ் எண்: 104)


# பாவலரேறு அவர்களிடம் நடுவண் புலனாய்வுத் துறையின் கடுமையான, அடுத்தடுத்த உசாவல்கள்!

## வன்முறைக் குற்றங்களில் சிக்கவைக்க நடுவணரசு காவல்துறையை ஏவியுள்ளதா?

## இந்த வகையில் தமிழின முன்னேற்ற முயற்சிகளையும் தமிழ்நாட்டு விடுதலை முயற்சிகளையும் எவராலும் தடுத்து நிறுத்தி விட முடியாது.

## நடுவணரசுக்குப் பாவலரேறு எச்சரிக்கை!

அண்மையில் தமிழ் நாட்டில் நடந்த இரண்டு மூன்று குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகளை யடுத்து, நடுவணரசுப் புலனாய்வுத் துறையினர் (C.B.I.), தென்மொழி யன்பர்களையும் உ. த. மு. க. அன்பர்களையும் பலவகையிலும் ஆங்காங்கே கடுமையாக அணுகி உசாவி வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. தலைமையகங்களிலும் அவ் வுசாவல்கள் நடந்து வருகின்றன.

பொதுவாக நடுவணரசுக்கு — குறிப்பாக இராசீவுக்குத் தாங்கள் செய்யும் குற்றங்கள் என்னென்ன என்பது பற்றியோ, அவற்றைப் பற்றி மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பது பற்றியோ, அதனால் மக்களிடையில் என்னென்ன எதிர்விளைவுகள் நேரும் என்பது பற்றியோ சிறிதும் கவலையிருப்பதாகத் தெரியவில்லை. அதைப் பற்றி யார்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# சிந்தனைக்குரிய செய்திகள்!

## நெருக்கடி நிலை...!

தலைமையமைச்சர் இராசீவ் தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள, உறுதியாக மீண்டும் நெருக்கடி நிலையைக் கொண்டு வருவார் என்று தெரிகிறது. எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்கித் தமது வல்லதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளவே, பஞ்சாபைச் சாக்கிட்டு 59-ஆவது சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்.

— *ராம் செத்மலானி* — (30-4-88)

## உருசியப் படைக்கருவிகள்!

ஆண்டுக்கு 100 கோடி உருபா மதிப்புள்ள படைக் கருவிகளை இந்தியாவுக்கு சோவியத்து ஒன்றியம் வழங்கி வருகிறது என்று படைத் துறைத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். பாதுகாப்புத் துறையில் மிகவும் புதினமான படைத்துறைத் தளவாடங்களைப் பொறுத்தமட்டில் ஒத்துழைப்புக்கு வகை செய்யும் அடிப்படையில் இரு நாடுகளின் உறவும் வளர்ந்து வருகிறது.

இப் படைக் கருவிகளுக்கான விற்பனைத் தொகையை இந்தியா உருபாவாகவே செலுத்தலாம். வட்டியும் குறைவு. இன்னும் இப்பணம் தவணை முறையிலும் செலுத்தலாம்.

— *செய்தி*. 30-4-88.

## இரராசிவின் வீணான செலவுகள்!

அண்மையில் தலைமையமைச்சர் இராசீவ் இமயமலைப் பைதிரத்திற்கு இரண்டு நாள் சுற்றுச் செலவு சென்றார். இதற்காக ஒரு கோடி உருபாவுக்கும் மேல் வீண் செலவு செய்யப்பட்டது என்றும், மாநிலத்தின் குறைந்த பொருள் நிலையில் இவ்வளவு பெரிய செலவை அம் மாநிலம் தாங்க இயலாது என்றும், அவரின் வருகையை யொட்டி, அங்குள்ள மூன்று நகரங்களிலும் காவலர்களே நிரப்பி வைக்கப் பெற்றிருந்தனர் என்றும், அம் மாநில முன்னாள் முதலமைச்சர் சாந்தகுமார் கூறியுள்ளார்.

— *செய்தி* 30-4-'88

## இதுவரை 2000 கோடி!

இலங்கையில் உள்ள இந்தியப் படைக்கு ஒரு நாளைக்கு உருபா 10 கோடி இந்திய அரசால் செலவிடப் பெறுகிறது. கடந்த ஆக்டோபர் முதல் இதுவரை இந்த வகையில் ஏறத்தாழ மக்கள்வரிப் பணத்தில் 2000 கோடி செலவிடப் பெற்றுள்ளது இத் தொகையைக் கொண்டு இதில் உருபா 1000 கோடியைக் கொண்டு மட்டுமே, இந்தியாவில் மூடிக் கிடக்கும் 689 பெரிய தொழில் நிறுவனங்களையும், 1,28,656 சிறு தொழில் நிறுவனங்களையும் திறக்கச் செய்து, இவற்றால் தொழில் இழந்து நிற்கும் ஏறத்தாழ 30 இலக்கம் தொழிலாளர்களையும் காப்பாற்ற முடியும்.

— *கலைஞர் பேச்சு*: மே-1.

## இராசீவுக்கே அனைத்துச் செயல்களும்!

மே நாள் கூட்டத்தில் பேச இராசீவ் உ.பி. மாநிலம் கான்பூர் சென்றிருந்தார். இவர் அங்குப் போவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பாகவே 25 அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்து ஆள் திரட்டும் 'மும்பணி' வேலையில் ஈடுபட்டனர். அதிகாரிகளும், பெருமகன்களும் ஆள்திரட்டப் பயன்படுத்தப்பட்டனர். மாநில முதல்வரோ கான்பூருக்கும் இலக்னோவுக்கும் மாறி மாறிப் பறந்து பறந்து இந்த ஆள் திரட்டும் பணியை மேற்பார்வையிட்டார். மே நாள் பேரணியில் கலந்து கொள்ள குறைந்த அளவு 5 இலக்கம் பேர் வேண்டும் என்று முயன்றும் 2 இலக்கம் பேரைத் தான் அவர்களால் திரட்டமுடிந்தது. உ.பி. மாநிலம் முழுவதும் பொது மக்களுக்குப் பயன்பட்டுக் கொண்டிருந்த 5000 பேருந்துகள் பேரணிக்கு மக்களை மாநிலம் முழுவதிலிருந்தும் கொண்டு வந்து சேர்க்கப் பயன்படுத்தப்பட்டதால், 4 நாள்களாக பேருந்து இல்லாமல் பொது மக்கள் தொல்லைப் பட்டனர். கான்பூரில் உள்ள தங்கும் விடுதிகள், சத்திரங்கள், சுற்றுலா விடுதிகள் அனைத்திலும் பொதுமக்கள் எவரையுமே 4 நாள்கள் தங்கவிடாமல், எல்லாவற்றிலுமே, பேராயக்கட்சித் தலைவர்கள், காவலர்கள், தொண்டர்களே நிரப்பப் பட்டனர். இராசீவின் இந்தப் பேரணிக் கூத்துக்கு அங்கு இயல்பாக இருந்த காவலர்களை விட 20 ஆயிரம் காவலர்கள் கூடுதலாக வரவழைக்கப் பட்டனர். உள்ளூர் மக்கள் காவலரின் கடுபிடிகளால் நான்கு நாள்கள் வீடுகளிலிருந்து வெளியேறவும் அஞ்சினர் என்று கூறப்படுகிறது.

## ஓர் அறிவிப்பு!

'*தமிழ்நிலம்*' புதிய வடிவில் கிழமைதோறும் வெளிவரவும் எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் இயக்கச் செய்திகளையும், தமிழின விழிப்புத் தொடர்பான செய்திகளையும், இன மீட்புக் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

என்ன கருதினாலும் சரி, தாங்கள் செய்வதைச் செய்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்னும் முரண்டும், பொதுமக்கள் நலன் கருதாத தன்மையும், இந்திரா காலத்தை விட, இராசீவ் காலத்தில் அரசுக்கு மிகுதியாகவே உண்டு. **இந்த அகங்கார — ஆணவ எண்ணமே இராசீவ் அரசுக்கு வெடிகுண்டாக அமைந்து விடக் கூடியது. வேறு வெடிகுண்டுகள் தேவையே இல்லை.**

மக்கள் தங்களுடைய இழுப்புகளுக் கெல்லாம் அல்லது கட்டுப் பாட்டுக் கெல்லாம் அடங்கி நடக்க வேண்டுமே அல்லாமல், தாங்கள் மக்கள் விரும்பும் அல்லது அவர்களுக்கு நலந்தரும் போக்குக்கு ஆளாகி விடக் கூடாதே என்பதுதான் அரசின் எண்ணமாக இருக்கிறது என்பதைக் கடந்த காலத்தில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகள் உறுதி செய்துள்ளன. இத்தகைய எதிர்விளைவு நிகழ்ச்சிகள் இங்கு அங்கு என்னுதபடி இந்தியா முழுவதும் பல்வேறு தேசிய இன மக்களிடம் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகவே நடந்து வருவது எல்லாருக்கும் தெரியும். இது ஏதோ திடுமெனக் கிளம்பி விட்டதாக யாரும் கூறிவிட முடியாது.

ஆட்சி அதிகாரக் காரர்களின் வன்முறைப் போக்கும் மிகத் திமிரான நடவடிக்கைகளும், மக்களிடையே கொந்தளிப்பையும் மனக்கொதிப்பையும் ஏற்படுத்துவது உலகெங்கணும் நடந்து வரும் செய்தியே! அவற்றுக்கான எதிர்விளைவு அடையாளங்களே அண்மையில் நடந்த குண்டு வெடிப்புகளும், பிற வன்முறை நிகழ்ச்சிகளும். இவற்றைச் செய்தவர்கள் பெரும்பாலும் இளைஞர்களாகவே இருத்தல் கூடும். ஏனெனில், நடுவண் அரசை எதிர்க்கின்ற அரசியல் முது தலைவர்களெல்லாரும் தமிழகத்தைப் பொறுத்த வரையில், நன்கு காயடிக்கப் பெற்ற — ஆண்மையற்ற — கோழைகளாகவே இருப்பதை நாம் பார்க்கிறோம். எதிர்க் கட்சிகளில் உள்ள இரண்டு மூன்று துணிவுள்ள சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர, பிற அனைத்துப் பேரும், நடுவணரசு எது செய்தாலும் என்ன பேசினாலும் அவற்றுக்கு எதிராக வலிக்காமல் பேசும் — நோகாமல் அடிக்கும் தந்திரக் காரர்களாகவே இருக்கின்றனர்.

இந்த நிலையில், நடுவணரசின் அடாவடித்தனமான நடவடிக்கைகளையெல்லாம் தட்டிக்கேட்கும் துணிவுள்ளவர்களாக, இங்குள்ள இளைஞர்கள் மாறிவருவதில் வியப்பில்லை. கருத்தளவில் போராடிப் போராடிக் கோரிக்கையளவில் கூட்டங்கள் மாநாடுகள் நடத்தி நடத்தித் தீர்மானங்கள் போட்டுப் போட்டு, இனி அவற்றினும் விஞ்சிய வகையில் பேரணிகள், ஊர்வலங்கள், போராட்டங்கள் நடத்தி நடத்திச் சோர்வுற்ற — சலித்துப் போன, குருதி கொப்புளிக்கும், இளம் உள்ளங்களே, இப்பொழுது கருவிகளைத் தூக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இவர்களின் போக்குகளைத் தவறு என்று கூறுதற்கு முற்பட்டவர்கள், அரசின் போக்குகளையும் கண்டிக்கத் தெரிந்தவர்களாக அல்லது கண்டிக்கத் துணிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் இளைஞர்களின் எழுச்சிகளை மட்டும் கண்டிப்பதும், அவற்றுக்கு மூல காரணமாக உள்ள அரசின் அரம்பத் தனமான, கொள்ளையடிப்புத் தன்மையிலமைந்த நடைமுறைகளைக் கண்டு கொள்ளாமல் இருப்பதும் எந்த வகையில் ஞாயமானது என்று கேட்க விரும்புகிறோம்.

இனி, இவை எப்படியோ இருக்கட்டும். இளைஞர்கள் எழுச்சி கொண்டுள்ளார்கள் என்பதற்காக, இவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் — ஒடுக்க வேண்டும் என்னும் அரசின் தவறான கொள்கைக்காக, இந்தப் பழியை யார்மேல் போடலாம் என்றபடி நம் தமிழ்நாட்டில் உள்ள நடுவணரசுக் காவல்துறை மேல்மட்ட அதிகாரிகள், கடந்த ஒரு மாதமாகப் பல விடங்களிலும் பல வகையிலும் ஆய்வு செய்து அலையோ, அலையென்று அலைந்து, அங்கும் இங்கும் சுற்றி, இறுதியில் நம் தென்மொழி அலுவலகத்திற்கும் அச்சகத்திற்கும் வந்து, ஒருவாறு நிறைவுகொண்டு, நம்மைப் பற்றியும், நம் தென்மொழி அன்பர்களைப் பற்றியும், உ. த. மு. க. தொண்டர்களை பற்றியும், **தென்மொழி, தமிழ்நிலம்** விற்பனை செய்யும் முகவர்களைப் பற்றியும், பலவாறு நம்மிடம் வினாக்கள் எழுப்பியும், அவர்களிடம் சென்று உசாவியும், பல்வேறு வகையான நெருக்கடிகளையும், அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் செய்து வருகிறார்கள் என்பதைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

நம் நாட்டைப் பொறுத்த வரையில், ஒருவன், எத்துணைக் கொடியவனாகவும் ஒழுக்கக் கேடனாகவும் திருடனாகவும் இருந்தாலும், ஒரு மதத்தைச் சார்ந்த செயல்களைச் செய்வானானால், அவன் எத்துணை நல்லவனாகவும், அறக்காப்பாளனாகவும், நேர்மையாளனாகவும், மக்களால் மதிக்கப்பட்டு, குமுகாயத்தில், ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்று விடுகிறானே, அதேபோல, ஓர் அறக் கொடியவன், சுரண்டல் காரன், முடிச்சு மாறி, கொள்ளைக் காரன் அல்லது கொலைகாரன் கொஞ்சம் பசையுள்ளவனாக விருந்து, ஆளுங்கட்சியைச் சார்ந்து இயங்கி விட்டால், அவனுக்குக் காவல் துறையினராலோ, அல்லது அறத்துறையினராலோ எந்தவகைத் தொல்லையோ இடர்ப்பாடோ அல்லது தண்டனையோ ஏற்படுவதில்லை; மாறாக அவர்கள் சார்பிலிருந்து பாதுகாப்போ, பாராட்டோ, பட்டங்

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# விடுதலைப் புலிகள் வெற்றி பெறமுடியுமா? வெளிநாட்டுத் தாளிகைகள் என்ன சொல்கின்றன?

-- தஞ்சை நலங்கிள்ளி (அமெரிக்கா)

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியப் படையை எதிர்த்து வெற்றி பெற முடியுமா என்ற ஐயம் தமிழ்நாட்டுத் தமிழர் சிலரிடையே எழுந்துள்ளது. ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்கக் கண்டங்களில் அண்மைக் காலத்து நடந்த விடுதலைப் போர்களை-யும், புரட்சிப் போர்களையும் ஆராய்ந்து பார்த்தால் விடுதலைப் புலிகள் நாளடைவில் வெற்றி பெறு-வார்களென்பதும், இந்தியப்படை தலைகுனிந்து தன்னாட்டுக்குத் திரும்பு மென்பதும் திண்ணம்.

இச்சிறு கட்டுரையில் அப்போர்களின் வரலாற்றினை விளக்கப் போவதில்லை. மாறாக, அப்போர்களை நேரடியாகவே பார்த்தவர்களும், அவ் விடுதலைப் போர்களின் வரலாறுகளைப் படித்தறிந்தவர்களும், இந்தியப் படையின் வன்மை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆற்றல் முதலியவற்றை ஆய்ந்து பார்த்தவர்களுமான வெளிநாட்டுத் தாளிகையாளர்கள் (Foreign newspaper reporters) என்ன சொல்கிறார்களென்பதைக் காண்போம். கடந்த ஆண்டில் (1987) அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளின் தாளிகை-களில் வெளிவந்த செய்திகள் சிலவற்றின் தமி-ழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

1. "இந்தியப் படை பெருமளவில் போர்க் கருவிகளைக் கொண்டிருந்தாலும், அது தான் வெற்றிப்பெற முடியாத ஒரு போரில் (a war that India cannot win) ஈடுபட்டுள்ளது"

— டைம்சு (Times), அமெரிக்கா

2. "தமிழ்ப் புலிகளை எளிதில் முடித்துக் கட்டி விடலாமென இந்தியப் படை எண்ணியது. ஆனால் தமிழீழப் புலிகள் தீவிரமான விடுதலைப் போராளி-கள் என்பதை இப்போது கண்டறிந்துள்ளது. தமிழீழப் புலிகள் மிகையான கட்டுக் கோப்பும், அஞ்சா நெஞ்சும் உடையவர்கள்."

—சன்டே டைம்சு (Sunday Times), இங்கிலாந்து

3. "தமிழீழப் புலிகளின் படையமைப்புகளை நேரில் பார்த்த வெளிநாட்டுத் தாளிகையாளர்கள் தமிழ்ப் புலிகளின் வீரத்தையும், அவர்களது படையமைப்புத் திறனையும், பொதுமக்கள் அவர்களுக்குக் கொடுக்கும் ஆதரவினையும் பற்றி விளக்குகிறார்கள்."

— சன்டே டைம்சு, இங்கிலாந்து.

4. "தமிழ்ப் போராளிகள் நாட்டுப் புறங்க-ளில் செயல்பட்டு வருகிறார்கள். இந்தியப் படை-யினரின் குண்டு வீச்சுகள் விளைத்த அழிவுகளைக் கண்ட இளைஞர் பலர் புதியதாகத் தமிழ்ப் புலி-களின் படையில் சேரக் கூடும்."

— நியூயார்க் டைம்சு (New york Times), அமெரிக்கா.

5. "தமிழ்ப் புலிகள் ஊர்ப் புறங்களிலும், நகர்களிலும் மக்களோடு மக்களாய்க் கலந்து வாழ்ந்து புரட்சிப் போர்களில் (கொரில்லாப் போர்) ஈடுபடக் கூடும். இந்தியப்படை இத்தகைய போர் முறைகளில் வன்மையற்றது."

— நியூயார்க் டைம்சு, அமெரிக்கா.

6. "இந்தியப் படைக்குப் போர் கருவிகள் பெருமளவிலிருந்தாலும், அப்படை புரட்சிப் போரை (கொரில்லாப் போர்) எதிர்த்துப் போரிடும் திறம் படைத்ததன்று."

— நியூயார்க் வீக்கு (News Week), அமெரிக்கா

7. "தமிழீழ விடுதலைப் புலிகளின் புரட்சிப் போர் (கொரில்லாப் போர்) இந்தியப் படையாளர்-களை அதிர வைத்துள்ளது."

" — டைம்சு, அமெரிக்கா.

8. "இந்தியப் படையினருக்கு இலங்கையில் ஏற்பட்ட இழப்புகளால் இந்தியப் படைத்துறையே ஆட்டங் கண்டுள்ளது."

— நியூயார்க் டைம்சு, அமெரிக்கா.

9. யாழ்ப்பாணப் பொதுமக்கள் இந்தியப் படையினரை வெறுக்கிறார்கள்."

— நியூயாாக் டைம்சு, அமெரிக்கா.

10 "இலங்கைத் தமிழ்மக்கள் இந்தியப்படையைத் தங்கள் எதிரியாகவே கருதுகிறார்கள்."

— நியூயார்க் டைம்சு, அமெரிக்கா.

இறுதியாக ஒன்று. இங்கிலாந்து நாட்டி-லிருந்து வெளிவரும் சண்டே டைம்சு (Sunday Times) என்ற தாளிகை தமிழீழ விடுதலைப் புலி-களைப் பற்றியும், அதன் தலைவர் தமிழ்த்திரு வே. பிரபாகரனைப் பற்றியும் என்ன சொல்கிறது தெரியுமா?

"பிரபாகரன் தலைசிறந்த புரட்சிப் போர் (கொரில்லாப் போர்) திறலாளர். அவரது தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆசி-யக் கண்டத்திலேயே மிகவும் ஆற்றல் வாய்ந்த புரட்சிப் படையாக மலர்ந்துள்ளனர்."

— சண்டே டைம்சு, இங்கிலாந்து.

பலவும் படித்தும், பார்த்துமறிந்த நடுநிலைத் தாளிகைகளே பாராட்டும் படியான திறன்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தொடர் (2)

# "தமிழீழ மக்கள் விடுதலைப் புரட்சியும், இந்தி(ய) வல்லரசின் சூழ்ச்சிகளும்"

-- செ. அமிழ்தன். --

எதிர்ப்பார்த்தே காத்திருந்து வந்த தில்லி இந்தி(ய) அரசு இதனைத் தமக்கு வாய்ப்புள்ளதாகப் பயன்படுத்தத் திட்டம் தீட்டி இறங்கியது. அதனால் அத் தில்லியரசு ஈழத் தமிழ் மக்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்த போராளிகளின் குழுக்களுக்குத் தேவையான ஏந்து(வசதி)களையும், பயிற்சிக்கான தாவடி(முகாம்)களையும் அமைத்துக் கொடுத்தும், கருவிகளையும், பயிற்சிகளையும், தானே வழங்கியது. இதனைக் கண்டு **தில்லியரசு தமிழீழ விடுதலைக்கு உதவுகிறது என்றெண்ணிப், போராளிக்குழுக்களில் சில இந்திய உளவுப் படையான "ரா(RAW)"வின் கட்டளைகளை ஏற்கத் தொடங்கின. அந்நிலையில் அதனை அம்பலப்படுத்திய சில சிறு குழுக்கள், தமிழக மண்ணில் இயங்க முடியாமற் தடைப்பட்டுப் போயின.** எனவே பெரிய குழுக்கள்தமை தன்வயமாக்கிக் கொள்ளும் முயற்சிகளில் தில்லியரசு ஈடுபட்டது. ஈழப் போராளிகளைத் தன்வயப் படுத்துவதன் மூலம் இலங்கை அரசைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பணிய வைக்க வேண்டும் எனவும் கருதியது அத்தில்லியரசு. அதனால் இலங்கையரசு அவ்வப்போது, "இந்தியா போராளிகளுக்கு உதவுகிறது" எனக் கூறிய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் "இந்தியா ஏதிலி (அகதி)களை மட்டுமே ஏற்றுள்ளது; போராளிகள் தமிழகத்தில் இல்லை" எனவும் கூறிப் போராளிகளை இலங்கை அரசிடம் இருந்து காப்பாற்றுவது போல், நடிக்கத் தொடங்கியது. இதனை உண்மை என நம்பிய ஈழப் போராளிகள் இந்தி(ய)த் தில்லி யரசு விரித்த சூழ்ச்சி வலைகளுக்குள் சிக்கத் தொடங்கினர்.

## தமிழக மக்கள் எழுச்சியும், முதலாளியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சியும்:

1983-இல் ஈழத்தில் நடைபெற்ற சூலை இனப் படுகொலையால் தமிழகத்தில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து ஈழ விடுதலைக்காகக் குரலெழுப்பத் தொடங்கினர். இதனால் இலங்கை அரசுக்கு எதிரான கண்டனப் போராட்டங்கள் எழுந்தன. இதனைத் தன்வயமாக்கிக் கொள்ள தமிழக முதலாளியத் தலைமைகள், ஈழச்சிக்கலைப் போட்டி போட்டுக் கொண்டு ஏற்றுக் கொண்டனர். எனினும் அவர்கள் தங்கள் முதலாளியப் போக்கால் ஈழப் போராளிகளைப் பிரித்தாளத் தொடங்கினர். இதன் விளைவாகத் தமிழீழத்தில் அங்குமிங்குமாகக் குழுக்களாகப் பிரிந்து போராடி வந்த போராளிகள் தமிழகத்தில் ஒன்றிணைவது தடுக்கப் பட்டு, முதலாளியப் பிரித்தாளும் சூழ்ச்சி நிறைவேறியது. ஈழத்திலிருந்து தமிழகம் வந்த இயக்கங்களில் பெரும் இயக்கங்களாகப் பின்வரும் இயக்கங்கள் இருந்தன. அவை:-

1) தமிழீழ விடுதலை இயக்கம்(T.E.L.O) டெலோ.
2) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (P.L.O.T) பிளாட்.
3) தமிழீழ விடுதலைப் புலிகள் (L.T.T.E) புலிகள்.
4) ஈழப் புரட்சி அமைப்பு (E.R.O.S) ஈரோசு.

5) ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F) இ.பி.ஆர்.எல்.எப். ஆகியன. இவற்றில் இறுதியிரு இயக்கங்களும், மலையாள மக்களுக்கான நிலச்சிக்கலையும் ஈழச்சிக்கலுடன் இணைத்தன. இவற்றில் முன்னர் கூறிய முதலாளியத் தலைமைகளின் **பிரித்தாளும் சூழ்சசிகளால் 'டெலோ' தி.மு.க—வின் உரிமை இயக்கமாகவும், புலிகள் இயக்கம் தி.க—வின் உரிமை இயக்கமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.** ஏனைய இயக்கங்களாகிய, பிளாட், ஈரோசு, இ. பி. ஆர். எல். எப்., போன்ற இயக்கங்கள் இம் முதலாளியத் தலைமைகளால் புறக்கணிக்கப்பட்டன. இம் முதலாளியத் தலைமைகள் இக்குழுக்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரே செயற் திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து போராட வேண்டும் எனும் நிலையையோ, அல்லது அதற்கான முயற்சிகளையோ முன்னெடுக்கவில்லை; அதை விரும்பவுமில்லை. இந்தத் தலைமைகள் இந்நிலையைக் கைக்கொள்வதற்கு இவை தில்லிக்குக் கீழிருந்து இயங்க வேண்டிய நிலையும், இந்தி(ய)த் தில்லி அரசின் கட்டளையும், பணிப்பும் கரணியங்களாக இருக்க வேண்டும்.

## திம்புப் பேச்சுரையும், தில்லி பேரரசும்:

தமிழீழ விடுதலைக்கு உதவுவது போல் நடித்து இவ்வாறு அதற்காகப் போராடும் போராளிகளைத் தனித்தனியே தன்வயப்படுத்திக் கொண்ட தில்லிப் பேரரசு, இலங்கை மீது தனது வல்லரசு மேலாளுமையை விரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு **'நல்லெண்ணத் தூது'** வடிவம் கற்பித்து நிறைவேற்றத் தொடங்கியது. இதன் வழி இலங்கையரசை, தமிழீழ விடுதலைக்குப் போராடும் போராளிகளுடன் பேச்சுரை நடத்த ஒப்புக் கொள்-

ளும் அளவுக்குப் பணிய வைத்தது. இதன் மூலம் தில்லிப் பேரரசின்றித் தமிழீழ விடுதலை இல்லை எனும் உணர்வை ஈழப் போராளிகளின் நடுவே உலவவிட்டது. இவற்றின் மூலமாகப் பூடானின் தலைநகரான திம்புவிற் கூடிப் பேச்சுரை நடத்துவது என முடிவேற்பட்டது. இப் பேச்சுரை இரு கட்டங்களில் நடைபெற்றது. இதன் முதற்கட்டப் பேச்சுரையில் நடுநிலை ஏற்பதாகக் கூறிய தில்லியரசு தான் கூறும் முடிவையே போராளிகளின் குழுக்கள் ஏற்க வேண்டும் எனக்கூறிப் போராளிகளைக் கட்டுப்படுத்தியது. இதனைக் கண்டு தமிழீழ விடுதலைக்கு உதவுகிறது என நம்பியிருந்த போராளிகளின் தலைவர்கள் விழிப்படைந்து உண்மையை உணரத் தொடங்கினர். இப் பேச்சுரையில் கீழ்க்காணும் நான்கு கோரிக்கைகளைப் போராளிகள் முன் வைத்தனர். அவை:-

1) ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்வது,
2) ஈழத் தமிழ் மக்களது வரலாற்று வழித் தாயகத்தை ஏற்றுக் கொள்வது,
3) ஈழத் தமிழ் மக்களுடைய தானே தீர்மானிக்கும் உரிமையை (சுய நிர்ணய உரிமை) ஏற்றுக் கொள்வது,
4) மலையகத் தமிழ் மக்களது குடியுரிமையை ஏற்றுக் கொள்வது,

போன்றவையே ஆகும். ஆனால் இலங்கையரசும், தில்லியரசும் இந்தியாவிலுள்ள மாநிலங்கள் போன்ற அரை — அரசமைப்புத் (Quasi — Federal) திட்டத்தையே தீர்வாக வலியுறுத்தின. இதனால் முதற்கட்டப் பேச்சுரை எவ்வகை முடிவுமின்றி முடிந்தது.

## தில்லியரசின் நடுநிலை நாடகமும், நாடு கடத்தல் ஆணையும்:

முதற்கட்டத் திம்புப் பேச்சுரையில் நடுநிலை ஏற்பதாகக் கூறிய தில்லியரசின் தன்மையை ஓரளவு புரிந்து கொண்ட போராளிகளின் குழுக்கள், ஏற்கெனவே ஒன்றிணைவதா, அல்லது தனித்திருப்பதா எனவிருந்த ஊசலாட்ட நிலையிலிருந்து முன்னேறி ஒன்றிணைவது என முடிவேற்பட்டு, அதன் பயனாக 'ஈழ தேசிய விடுதலை முன்னணி' (Eelam National Liberation Front) எனும் அமைப்பு உருவாகியது. இதில் தொடக்கத்தில இ. பி. ஆர். எல். எப்., டெலோ, ஈரோசு போன்ற இயக்கங்கள் இணைந்தன. சிறிது காலம் சென்று புலிகள் இயக்கமும் இதில் இணைந்தது.

இதனைக் கண்டு தில்லிப் பேரரசு அஞ்சியது. அதை எவ்வாறேனும் உடைத்தெறிந்து இரண்டாம் கட்ட பேச்சுரையில் அவற்றைத் தனித்தனியாகவே பங்கெடுக்க வைக்க வேண்டும் எனும் முயற்சியில் இறங்கியது. அதற்காகப் போராளிகளை மிரட்டும் போக்கில் ஈழதேசிய விடுதலை முன்னணித் தலைவர்களை நாடு கடத்த ஆணையிட்டது. ஆனால் அந்த ஆணையும், தலைவர்களும் தமிழக மக்களின் உணர்வு கிளர்ந்த போராட்டத்தினால் திரும்பப் பெறப்பட்டது. எனவே அம் முயற்சி தோல்வியை ஈட்டியது.

இரண்டாம் கட்டத் திம்புப் பேச்சுரையில் ஈழ தேசிய விடுதலை முன்னணி (E.N.L.F) கலந்து கொண்டது. இந்நிலையில் தனித்த இயக்கமாக பிளாட் நின்றது. எனவே கூட்டு முன்னணிக்கு எதிராகத் தனித்து நின்ற பிளாட் — டை இந்தி(ய) அரசு கையாள நினைத்துத், தனது திட்டத்தை ஏற்கக் கூறி அதை வற்புறுத்தியது. ஆனால் அதன் தலைவர்களில் சிலர் ஏற்க மறுப்புக் கூறவே, அவர்களை இந்திய உளவுப்படை "ரா" திட்டம் திட்டிக் கொன்று ஒழித்தது. மேலும் இப்பேச்சு உரையின் போது இலங்கையரசு அறிவித்திருந்த போர் நிறுத்தத்தை மீறித் திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களில் அதிக அளவிலான இனப்படுகொலையை இலங்கைப் படைகள் நடத்தின. இதனால் பேச்சுரை முறிவடைந்தது. போராளிகள் பேச்சுரையிலிருந்து வெளியேறியதால் இந்தி(ய) தில்லிப் பேரரசு சுடுஞ்சினமுற்றது. இருந்த போதிலும் அது நடுநிலை ஏற்பதாக வெளிக் காட்டிக் கொண்டது.

பிளாட்—டின் தலைவர்கள் சிலரை உளவுப் படையினர் கொன்ற நிகழ்வுகள் பிற இயக்கத்தவரும், குழுவினர்களும் தில்லிப் பேயரசின் தன்மையைப் புரிந்து கொள்ள வாய்ப்பளித்தன. எனினும் அவை தமிழகத்தைத் தமது விடுதலைப் போராட்டத்துக்குரிய பின்னிலமாகப் பயன்படுத்திக் கொண்டேயாகல் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த கரணியத்தால் தில்லியரசின் ஆணைகளுக்குச் செவிசாய்த்து இயங்க வேண்டிய நிலைமை ஏற்றனர். மேலும் தில்லிப் பேரரசின்றித் தமிழீழ விடுதலை இல்லை எனும் உணர்வு முன் கூட்டியே திட்டமிட்டுப் பரப்பப் பட்டிருந்ததால், தில்லிப்பேயரசின் அரவணைப்பிலேயே தமிழீழத்தை அடைய வேண்டும் என சில குழுக்கள் எண்ணத் தலைப்பட்டன. எனவே அவை தில்லியரசு தரும் உதவிகளுக்கெனக் காத்துத் தவம் கிடந்தன. "முன்னணி" தோன்றியதை கண்டு அஞ்சிய தில்லியரசு இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி ஓர் இயக்கத்துக்கு எதிரியாக மற்றோர் இயக்கத்தை நிறுத்தி வைக்கும் சூழ்ச்சியில் இறங்கியது.

## தில்லியரசின் படையெடுப்புச் சூழ்ச்சியும், டெலோ--வின் சரிவும்:

இதற்காக அது டெலோ—வை வளர்ப்பு (தத்து) எடுத்தது. அது வரையிலும் டெலோ ஓர்

Scanned with CamScanner

உதிரிக் கும்பல் ஆகவே இயங்கி வந்தது. தில்லியரசு தரும் திட்டங்களுக்கு டெலோ இசைந்து நடந்தால், தமிழீழத்தை ஏழே திங்களில் மீட்டுத் தருவதாகவும் அத் தில்லியரசு வற்புறுத்தி அளித்தது. இதனை உண்மையென நம்பிய டெலோ இயக்கம் இலங்கை அரசுப் படைகளின் தாவடி (முகாம்)களையும், ஏனைய இயக்கங்களின் தாவடி(முகாம்)களையும் காட்டிக் கொடுக்க முன் வந்தது.

இதனை அறிந்த புலிகள் இயக்கம் டெலோ-வைக் குமுக எதிர்ப்பு இயக்கம் (சமூக விரோத சக்தி) என்று அறிவித்துப் படை நடவடிக்கைகளின் மூலம் டெலோ—வினரைக் கருவியற்றோர்களாக்கித் தாவடிகளை அழித்து இந்தி(ய)த் தில்லியரசின் தலையீட்டை வெட்டியெறிந்தது. இதன் மூலம் தில்லியரசின் படையெடுப்புத் திட்டத்தைப் புதைமேடைக்கு அனுப்பியது புலிகள் இயக்கம். புலிகள் மேற்கொண்ட படை நடவடிக்கையில்தான் டெலோ—வின் தலைவர் சிறி சபாரெத்தினம் இறந்து போனார். இந்த அதிரடிச் செயலை ஏனைய இயக்கங்கள் உதட்டளவில், உள்ளத்தளவில் சரியென்றே வரவேற்ற போதிலும், எழுத்தளவில் புலிகள் இயக்கம் கொடுங்கோன்மைத் (Fascism) தன்மையில் இறங்குவதாகக் கண்டித்துத் தமது அறிக்கைகளை வெளியிட்டனர். இதனால் இ. என். எல். எப். முன்னணி உடைந்தது. இந்தி(ய) அரசின் விருப்பம் போலவே இணைந்த இயக்கங்கள் மீண்டும் பிரிந்து இயங்கின. இச் சூழ்ச்சியின் மூலம் தில்லியரசு டெலோ இயக்கத்தைப் புலிகளின் முதல் எதிரியாக்கி மகிழ்ந்தது.

தமது எண்ணம் ஈடேறிவிட்ட இந்தி(ய)த் தில்லியரசு சிறி சபாரெத்தினத்தின் இறப்பையே கரணியங் காட்டி ஈழப் போராளிகளுக்குத் தமிழக மக்களிடையே இருக்கும் ஆதரவைக் குலைக்கும் முயற்சிகளில் திட்டமிட்டுப் பரப்பல் வேலைகளில் இறங்கியது. அதனைச் செம்மையாகவே திராவிட(ர்) இயக்கமாகிய தி.மு.க. செய்து முடித்தது. மேலும் அதன் தலைமை அனைத்துப் போராளி இயக்கங்களும் ஒன்றிணையும் வரை தாம் எதையும் தமிழீழ விடுதலைத் தொடர்பாக மேற்கொள்ளப் போவதில்லை என விலகிக் கொண்டது. இதனால் தமிழீழ விடுதலைக்கு ஆதரவு தருதவற்குத் தமிழகத்தில் உருவாகிய தமிழீழ ஆதரவாளர் அமைப்பு (TESO) உடைந்து, தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழக மக்களிடையே தாழ்வான இடத்தைப் பெற்றது. இது தில்லி இந்தி(ய) அரசு தமிழீழ விடுதலைக்கு எதிராகப் பெற்ற வெற்றியாகும். (தொடரும்)

---

**இந்தியா ஒரு நாடு; ஆனால் ஒரு தேசமன்று; ஏனெனில் ஒரு பொதுமொழியையோ அல்லது பொதுப் பண்பாட்டையோ பெற்றிருக்க வேண்டிய தேவையை அது நிறைவு செய்யவில்லை**

**— இர்ஃபான் அபீப்.**

---

## காந்தவராயனும் சேந்தவராயனும்.

தமிழனின் வரலாற்றை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவருதல் போராட்டம், மக்கள் எழுச்சி மூலமே தமிழக வரலாறும் உருவாகிட முடியும். அடிமைகளாகத் தமிழர்களைச் சித்திரஞ்செய்யும் நிலைமையைத் தொல்லியல் ஆய்வு, மாற்றி, உண்மை வரலாற்றுக்குத் தடம் போடும் என்பதுறுதி.

கிருட்டிண தேவராயர்க்குத் திறை செலுத்த மறுத்த காந்தவராயன், சேந்தவராயன் வரலாற்றைத் தினமணி (1-4-88) ஏட்டில் திரு. நடன — காசிநாதன் — துணை இயக்குநர், தொல்லியல், சென்னை — எழுதியுள்ளார்.

இந்த, 16-ஆம் நூற்றாண்டு வரலாறே நமக்குத் தட்டுக் கெட்டுத்தான் கிடைக்கிறது. போராட்ட மிக்க மக்களின் தமிழகத்தின் வரலாற்றை மீண்டும் எழுதித் தமிழினம் விடுதலை காணுதல் வேண்டும். அதற்கான ஆராய்ச்சிகளை நாம் தொடர்வோம்!

மக்களின் அரசை எதிர்த்த போராட்டம் புதைக்கப்படுவதியல்பே. போலிமையான 'அரசு'களின் 'மெய்க்கீர்த்தி'களுக் கிடையே ஒளிவீசும் உண்மை விடுதலை வராலாற்றை நுண்ணிதின் ஆராய்ந்து வெளிப்படுத்த வரலாற்று மாணவர்கள் முனைவார்களாக!

**—பறம்பை அறிவன்.**

## மீண்டும் நெருக்கடிநிலைச் சட்டம்.

அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை மக்கள் தலைமேல் போட்டு ஆளும் கணம் தப்பித்துக் கொள்ள முயல்வதியல்பே! பஞ்சாபைக் காரணம் காட்டிக்கொண்டு வந்தாலும், இச்சட்டம் பிறபகுதிகளிலும் வரப்போகும் போரட்டங்களை மூடியிட்டுத் தடுக்கும் முயற்சியே! இந்த நெருக்கடி நிலைச் சட்டத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் ஏற்கமாட்டார். இவர் 1975 — நெருக்கடி நிலையை எதிர்த்தவர் என்றெல்லாம் கதை எழுதுகின்றனர். கடந்த காலத்துத் தலைவர்கள் இராசேந்திரப் பிரசாத்தும், இராசாசியும் இப்போதிருந்தால் இந்தச் சட்டத்தை எதிர்த்திருப்பார்கள் என்று **தினமணி** கூறுகிறது. இப்படித் 'தனிஆள்களை' உயர்த்திப் பிடித்து மக்கள் போராட்டங்களையும் கருத்துகளையும் திரையிட்டு விடப் பார்ப்பது அரசியல் கவடென்றே கருதுகிறோம்!

**— பறம்பை அறிவன்.**

---

### அன்பர்கள் கவனிக்க!

**பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**-அமைச்சர்.**

# நாம் -- தமிழர்கள், ஏன் இந்திக் காரர்களாகவும், ஆங்கிலேயர்களாகவும் ஆக வேண்டும்?

"நம் மொழி தமிழ்! நம் இனம் தமிழினம்! நாம் தமிழ் மக்கள்!" —என்கிற உணர்வு நம்மிடம் இல்லாததால்தான் நாம் அடிமைகளாக உள்ளோம்!

பொருளியலில் நம்மைச் சுரண்டி, நம்மைப்படுத்திய இனங்களின் மொழிகள் நம் மீது வலிய திணிக்கப்படுவதால், நாம் அடிமைகளாக அவற்றைப் பழிக்கிறோம்,

அதனால்தான்,

— தமிழ் நாட்டுக் காவிரி காய்ந்து கிடக்கிறது.
— தமிழ் நாட்டு நரிமணம் கன்னெய் (பெட்ரோல்) நமக்குக் கிடைக்கவில்லை.
— தமிழ் நாட்டு விளைச்சல் பொருள்கள் தமிழ் நாட்டு மக்களுக்கே இல்லாமல் கொள்ளையடிக்கப்படுகின்றன.

தமிழ் நாட்டு உழைப்பு, மற்றவர்களைக் கொழுக்க வைக்கவே நாம் ஏழைகளானோம்.

— உண்மையில், தமிழ் மக்கள் வறுமையில் உழலாமல் அனைவரும் உண்ண உணவு, உடுத்த உடை, குடிலில் வாழ வேண்டுமானால்,
— தமிழ் நாட்டு விளைச்சல் பொருள்கள் தமிழ் நாட்டு மக்களுக்காக ஆக வேண்டுமானால்,
— உலக நாடுகளின் சட்டத்தின் துணைகொண்டு, தமிழ் நாட்டுக் காவிரியில் தண்ணீர் வர வேண்டுமானால், நமக்கு,

நாம் — தமிழ் நாட்டு உழைக்கும் மக்கள் எனும் ஒற்றுமை உணர்வு வேண்டும்.

நம்முடைய உழைப்பும் உழைப்பின் விளைச்சலும் சுரண்டப்பட்டுச் சுரண்டிக் கொழுக்கிற ஆளும் இனங்களின் மொழிகளாகிய இந்தியும், ஆங்கிலமும், பிறமொழிகளும் நம் மீது திணிக்கப்பட்டு, நாம் இந்திக்காரர்களாகவும், ஆங்கிலேயர்களாகவும் மாற்றப்படுகிற பொழுது, நமக்கு எப்படி அந்த உணர்வு வரும்?

எனவே, நாம் தமிழ் நாட்டு உழைக்கும் மக்களாக, வறுமையின்றி நம் உழைப்பின் விளைச்சலை நாம் முழுக்க நம் வாழ்க்கைக்குப் பயன் படுத்த வேண்டுமானால்,

நம் மீது ஆளுமை கொண்டுள்ள பிறமொழி ஆளுமையை விரட்டி அடிக்க வேண்டும்,

**O நமக்குச் சூட்டப்பட்டுள்ள பிறமொழிப் பெயர்களைத் தூக்கி எறிய வேண்டும்.**

**O நம் வணிகக் கடைகளுக்குப் பெயர்களை நம் தமிழ் மொழியிலேயே வைக்கவேண்டும்.**

***நரேஷ், சுரேஷ், ரஜினி, கமல், ஸ்வப்னு*** — என்று பொருள் புரியாத இந்தப் பெயர்களை நாம் எதற்கு வைத்துக் கொள்ள வேண்டும்? ஆங்கிலத்தில், பிறமொழியில் பெயர் வைத்ததால்தான் பெருமை என்று

*'டீ ஸ்டால்'*
*'ஹேர் டிரஸ்ஸஸ்'*
*'டிரை கிளீனர்ஸ்'*
*'டிரான்ஸ் போர்ட்'*
*'ஜென்ரல் மெர்ச்சண்ட்'* — என்றெல்லாம் —

— நம் மீது நாமே நம் ஆளுமை இனங்களின் மொழிகளை எதற்காக எழுதிக் கொள்ள வேண்டும்? ஆங்கிலப் பெயர்களைத் தமிழல் எழுதிக் கொண்டு, ஆங்கில ஆசையில் எதற்காக நம்மை அடிமைகளாக்கிக் கொள்ளவேண்டும்?

நாம் தமிழர்களாக இருந்துகொண்டு, நம் தமிழ் மொழியில் பெயர் வைத்துக்கொள்ள எதற்குக் கூச்சப்பட வேண்டும்?

நம் மீது ஏறி ஆட்டம் போடுகிற ஆளும் வெறி கொண்ட இனங்களின் மொழி வெறிக்கு நாம் அடிமைப்படாமல்,

நம் தமிழ் மொழியையே எங்கும், எதிலும் பயன் படுத்துவோம்!

தமிழ்ப் பெயர்களையே வைத்துக்கொள்வோம்! தமிழ் மக்களின் மீது, தமிழ் நாட்டின் மீது திணிக்கப்பட்டிருக்கும் அனைத்து ஆளுமை வெறித் தனங்களையும் வெட்டி வீழ்த்துவோம்!

— **தமிழ் நாடு மக்கள் பேரவை.**

# 'பொறுமை' புலியாகிறது!

இசை — எங்கும்,
நாடகம் ஊரெல்லாம்;
திரைப்படம் தேசமெல்லாம்;
போராட்டம் வாழ்நாளெல்லாம்;
நடுக்கடலில் மக்கள்
குடிநீரில்லை;
போராட்ட நடுவில் மக்கள்
விடிவுதானில்லை;
இசை, பாட்டெல்லாம்
கூச்சலென்பதால்
விடிய விடியக் கேட்க மனமிருந்தும்
'பொறுமை', புலியாகிக் கொண்டிருக்-
[கிறது!

— **பறம்பை அறிவன்.**

Scanned with CamScanner

# ஊழல் பேரரசன் இராசீவ்!

போஃபர்சு தகரி(பீரங்கி) வணிகத்தில் ஊழலே நடைபெறவில்லையென்று தலைமையமைச்சர் இராசீவின் சார்பாக, நாடாளுமன்ற உசாவற் குழு திட்டவட்டமாக அறிவித்துத் தனக்கிட்ட பணியை முடித்துக் கொண்டது.

**'குற்றவாளியும் நானே; வழக்கைக் கேட்பவரும் நானே; தீர்ப்பளிப்பவரும் நானே'** என்னும் ஒரு நடைமுறை [இராசீவின் தாயார் இந்திராவின் காலத்திலிருந்தே] கடைப்பிடிக்கப்பட்டு வந்து விட்டது.

இந்த வகையில் 'தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும்' என்னும் பழமொழி முழுவதும் மெய்யாகி விட்டது.

ஊழல் குற்றங்களைக் கண்டுபிடிப்பவர்களையும் அவற்றைப் பற்றிச் செய்திகள் வெளியிடும் தாளிகைகளையும் 'தேச இரண்டகர்கள்' (துரோகிகள்) என்று பட்டம் கட்டி ஒதுக்கி விடுவது எளிதாகி விட்டது.

பொதுமக்களுக்கு இந்த நடைமுறையைக் கண்டிப்பதற்குத் தேர்தல் நாளை விட வேறு வழியில்லை என்றாகி விட்டது.

தேர்தல் காலத்திலும் கூட ஒப்போலை போடுபவர்களைத் தமக்குச் சார்பாகத் திருப்புவதற்கு, அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வசதியாக இருக்கிறது. தேர்தல் நேரத்தில் தமக்குச் சார்பாகக் கருத்துகளைப் பரப்புவதற்கும், மக்களைத் தம் பக்கம் வளைத்துக் கொள்வதற்கும் தேர்தலுக்குப் பின்னால் ஆட்சி அமைப்பதற்கும் அவர்களுக்கு ஏராளமாகப் பொருள் தேவைப் படுகிறது. இந்நிலை அரசியல்காரர்களை கையூட்டு, ஊழல் உள்பட எல்லாவகையான சட்டத்திற்குப் புறம்பான — மாறான — நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டிய தேவையையும் கட்டாயத்தையும் உண்டு பண்ணுகிறது.

1984 அக்டோபர் 31-ஆம் பக்கல் இராசீவ் தலைமை அமைச்சர் பதவியேற்ற கையோடு 'ஊழலை ஒழித்துக் கட்டுவேன்; தூய்மையான ஆட்சியைத் தருவேன்' என்று உறுதியளித்துப் பேசினார். ஆனால் அவர் சந்தித்த முதல் தேர்தலிலேயே எந்த அளவுக்கு ஊழல் மூலம் திரட்டிய பணம் தேவைப்படுகிறது என்பதைத் தெரிந்து கொண்டார். ஆளுங் கட்சிகளின் தேர்தல் மற்றும் பொருள் தேவைகளில் பெரும்பங்கு அரசுச் சலுகைகளை விற்றுத் திரட்டிய கையூட்டுப் பணந்தான் என்பதை இராசீவ் கண்டு கொண்டார்.

நேருவின் (விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் முதலமைச்சராக வந்த அவரின்) காலத்திலிருந்தே ஆளுங் கட்சியாக விருந்த பேராயக்கட்சி ஊழல் பணவருவாய்களிலிருந்தே வலுப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையான குற்றச் சாட்டு ஆகாது. நேருவுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவரின் கட்சிக் காரர்கள் ஊழல் செய்துதான் கட்சியை வலுப் படுத்திக் கொண்டனர். நேரு இந்தப் பொறுப்பைத் தாமே நேரடியாக ஏற்கா விடினும், தம் கட்சிக்காரர்களிடம் அதை விட்டு விட்டுக் கண்டும் காணாததும் போலவே இருந்து கொண்டார். மாநிலப் பேராயக் கட்சிகள் எந்த வகையில் ஏராளமான பணத்தைக் கட்சிக்கும் தேர்தலுக்கும் திரட்டித் தருகின்றன என்பதைப் பற்றி அவர் கவலைப் படாமல் தான் இருந்தார். அவர் காலத்திலேயே எசு. கே. பாட்டீல், அதுல்யா கோசு போன்ற ஊழல் பேர்வழிகள் கட்சிக்குக் கொள்ளைப் பணம் திரட்டியதை நேரு கண்டு கொள்ளாமல்தான் இருந்தார். முந்திரா ஊழல், மலையுந்து (ஜீப் வண்டி) ஊழல் முதலியவை மூடி மறைக்கப் பட்டன.

அதன் பின், 1966 சனவரியில் தலைமையமைச்சராகப் பொறுப்பேற்ற இந்திரா, தொடக்கத்தில் ஒருவாறாகச் செயல் பட்டாலும் தம் தந்தையையும் விஞ்சினார். பொருள் வகையில் மட்டும் அவர் ஊழல் புரியவில்லை. அரசியல் அதிகார நிலையிலும் அவர் புரிந்த ஊழல்கள், தாறுமாறான பொருள் திரட்டல்கள் கொஞ்ச நஞ்சம் இல்லை. அவர் காலத்தில் நடந்த அனைத்து வெளிநாட்டு வணிக நிறுவனங்கள், தேர்தல்கள் போன்ற அனைத்து நிலைகளிலும் அவர் கோடி கோடியாகப் பணம் திரட்டினார்; அவற்றுக்காக மனம் கூசாமல் ஊழல்களைச் செய்து வந்தார். இவற்றால் ஏற்பட்ட விளைவுகள் மிகவும் அதிகம். அவை,

1. உள்நாட்டு வணிக நிறுவனங்களுக்குச் சலுகைகள் செய்து பணம் திரட்டுவது. இவற்றுக்காக அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவது.

2. இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மீது, பிற நாட்டு நிறுவனங்களிடமிருந்து இடைத் தரகர்கள் வழியாகக் கோடிக்கணக்கான வெளிநாட்டுச் செலாவணி முறையிலேயே பணம் பெறுவது.

3. இந்திராவின் பெயரைச் சொல்லி அவர் மகன் சஞ்சய் காந்தி தென்கொரியாவிலிருந்து எண்ணெய்ப் பொருள்கள், பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள், வணிகப் பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதிகளில் ஏராளமாகத் தரகுப் பணம், கழிவுப் பணம் முதலியவற்றைக் கொஞ்சமும் அஞ்சாமல் பெற்று வந்தார்.

4. ஆண்டுக்குப் பத்தாயிரம் கோடி உருபா அளவில் இறக்குமதி செய்யப்படும் போர்க் கருவி-

கள், தளவாடங்கள், வானூர்திகள், கப்பல்கள் தகரிகள், ஏவுகணைகள் முதலியவற்றில் கொள்ளையான கொள்ளைகள் செய்யப்பட்டன.

5. இவற்றின் பொருட்டுத் தேவையற்ற முறையிலும், அதிக விலைகொடுத்தும் இறக்குமதிகள் செய்யப் பெற்றன. இப்படிப்பட்ட கணக்குகளைத் தணிக்கைக் குழுக்களோ பாராளுமன்ற உசாவல் குழுவோ கேட்டுக் கொள்ளத் தேவையில்லாத படி நடைமுறைகளில் கரவுகளும், களவுகளும் செய்யப் பெற்றன.

இந்நிலைகள் இராசீவ் அதிகாரத்திற்கு வந்தவுடன் இருமடங்கு, மும்மடங்கு பெருகி விட்டன. ஊழல் இதில்தான் இங்குதான் என்றில்லாத படி அனைத்து நிலையிலும் தலைவிரித்தாடத் தொடங்கி விட்டது.

இம்முறையில்தான் போஃபர்சு, ஃபேர்பாக்சு ஊழல்கள் நிகழ்த்தப் பெற்றன. எதிர்க்கட்சிகள் இவற்றைக் கண்டுகொண்டு கேட்கத் தொடங்கிய பொழுது, அவற்றை அதிகாரங்களைக் கொண்டு ஒன்றுமில்லாமல் செய்து விடுவது வழக்கமாகி விட்டது. இது தொடர்பாக அண்மையில் அமைக்கப் பெற்ற சங்கரானந்து உசாவல் குழு அரசு நிலையில் எந்தஊழலும் நடைபெறவில்லை என்றே, முடிவு சொன்னது, இராசீவின் ஆட்சியில் எதுவும் நடக்கலாம் என்னும் முடிவைக் கொண்டுவந்து விட்டது. இம்முறையில் இமயமலையையே வெளிநாட்டுக்கு விற்றுவிட்டு, அவர்கள் அதையும் கொஞ்சங் கொஞ்சமாகக் கரைத்து அல்லது சுரண்டி எடுத்துக் கொண்டு போனாலும், இறுதியில் 'ஒன்றுமே நடக்கவில்லை; இமயமலை காணாமல் போய் விட்டது' என்று முடிவு சொல்லப்பட்டாலும் நாம் வியப்படைவதற்கில்லை என்னும் நிலைமை வந்து விட்டது.

ஊழல் நடைபெறுவதை விட, அதைமுடி மறைக்கின்ற செயல்தான் இந்நாடு குடியரசு அமைப்பிலிருந்து எவ்வாறு மாறிப் படிப்படியாக ஒரு வல்லதிகார முறைக்குப் போய்க் கொண்டிக் கிறது என்பதை நமக்கு வெளிப்படையாகக் கூறுவதாகும்.

இராசீவ் ஆட்சிக்கு வந்த பிறகுதான் வெளிநாட்டு ஊழல் இறக்குமதிகள் பலவாற்றானும் பல்கிப் பெருகி ஏராளமான கடனில் ஆட்சி மூழ்கிக் கொண்டிருக்கிறது என்பதை அறிதல் வேண்டும். ஆட்சித் தலைவர்கள் காட்டும் வழியில் அரசு அதிகாரிகளும் இலக்கக் கணக்கில் கையூட்டு வாங்கிக் குவிக்கின்றனர். ஆட்சித் தலைவர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் சுவிசு போன்ற வெளிநாட்டு வைப்பகங்களில் ஏராளமான பணங்கள் இருப்பில் உள்ளன. இதன் காரணமாக நாட்டில் ஒரு பெரும் பொருளியல் வீழ்ச்சியே ஏற்பட்டுள்ளது. இது அடுத்துவரும் ஆண்டுகளில் வலிவான பொருள் நெருக்கடியை உண்டு பண்ணும் வலிமையுடையது என்பதைப் பொதுமக்கள் இப்பொழுதைய நிலையில் உணரமுடியாது.

இப்பொழுது அரசில், நாட்டில் ஊழல் இல்லாத துறையே இல்லை, ஊழல் நடைபெறாத இடமே இல்லை, ஊழல் செய்யாத அதிகாரியோ, பணியாளரோ இல்லை என்று கூறும்படி நிலைவானளவு மிக வளர்ந்து ஓங்கி விட்டது. கல்வித் துறை, அற மன்றங்கள், மருத்துவத்துறை எல்லாம் ஊழல், ஊழல் என்று விரிவடைந்து மக்கள் குரல் வளையையே கவ்வி விட்டது. இதன் விளைவாக மக்களினமே ஓர் ஊழல் சேற்றுப்பரப்பில் அழுந்திக் கிடக்கும்படி உள்ளது.

ஊழலின் ஊற்றுக்கண் ஏது என்று தேடிப் போனால் அது நாட்டை ஆள்பவராகவே இருப்பது கண்டு மனம் மிகத் துன்பமும் சோர்வும் அடைகிறது. இந்நிலைகள் மாறி ஒரு நல்ல நிலை பிறக்கும் என்பதில் யாருக்குமே நம்பிக்கை ஏற்பட வழியில்லை என்பதைத் தவிர இப்பொழுதைக்கு எதுவும் சொல்ல இயலாது.

— அடிப்படை: மே, 1-இல் **தினமணியில்** வந்த **கி. கசுத்தூரிரங்கன்** கட்டுரை.

---

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைத்த தமிழீழ விடுதலைப் புலிகட்கும், அவர்தம் தலைவர் பிரபாகரனுக்கும் துணைநிற்க வேண்டியது தமிழகத் தமிழராகிய நம் கடனாகும். நாம் முடிந்த அளவில், **எவ்வாற்றானும்** அவர்கட்கு உதவி செய்ய வேண்டும். மேலும், இந்திய அரசு விடுக்கும் பொய்யுரைகளை நம்பி, இத் தமிழ் மாமறவர்களைப் பற்றித் தவறான எண்ணம் கொண்டிருக்கும் தமிழர்களிடம் (அவர்கள் எக் கட்சியைச் சார்ந்திருந்தாலும்) உண்மைகளை அன்பான முறையில் எடுத்துக் கூறி, அவர்களையும் நம் வழிக்குக் கொண்டு வரவேண்டும். அவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகட்கு உதவி செய்யுமாறு இன்சொல்லால் வேண்ட வேண்டும். இதுவே நாம், தங்களுயிரையே பணயம் வைத்துப் போராடிய, போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகட்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

வாழ்க தமிழீழம்! வெல்க விடுதலைப் புலிகள்!

பின் குறிப்பு: டைம்சு, நியூயார்க் டைம்சு, சண்டே டைம்சு ஆகிய தாளிகைகளின் பெயர்களில் "டைம்சு" என்ற பொதுப் பெயர் காணப்பட்டாலும், அம்மூன்று தாளிகைகட்கும் எந்த வகைத் தொடர்புமில்லை. **தின** மணிக்கும், **தின** மலருக்கும், **தினத்** தந்திக்கும் எப்படி எந்த வகைத் தொடர்புமில்லையோ, அதே போல.

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

களோ, வெகுமதிகளோ கிடைத்து விடுகின்றன இன்னும் பொதுமக்களிடமிருந்தும் அளவற்ற மதிப்பும் பெருமையும் வேறு ஏற்பட்டு விடுகின்றன.

ஆனால், நம் போல், மக்கள் நலம் கருதித் தூய தொண்டிலோ, நேர்மையான நடவடிக்கைகளிலோ உண்மையான போக்கிலோ, ஆனால், அரசைச் சாராமல் வேறு எந்த அரசியல் கட்சிகளையும் சாராமல், இயங்கும் ஒருவர்க்கு, இத்தகைய காவல் துறைக் கடுப்பிடிகளும், நெருக்கல்களும், உசாவல்களும், மிரட்டல் உருட்டல்களும் தாம் பரிசுகளாகக் கிடைக்கின்றன.

இருப்பினும் இவற்றுக்கெல்லாம் அஞ்சாமல், மனம் சோர்வுறாமல், செயல் நெகிழ்ச்சி கொள்ளமால் நாம் பாடாற்றியாக வேண்டும்; தொண்டு செய்தாக வேண்டும். ஏனெனில் இது நாமே விரும்பி ஏற்றுக் கொண்ட தூய பணி; மக்கள் தொண்டு; காலத்தால் கட்டாயப் படுத்தப் பெற்ற தேவையான கடமை!

இந்தத் தூய மக்கள் தொண்டு, தமிழின முன்னேற்றமும் இன, நாட்டு விடுதலை நோக்கமும் உயிராகக் கொண்ட பணியானாலும், இன்றைய பார்ப்பனீய முதலாளிய நடுவணரசுக்கு நேர் எதிரானது! அதன் கரவான அரசியல் அடிமைத் தனத்திற்குத் துளியும் அடி பணியாதது. இங்குள்ள பிற ஒப்போலே — பதவி நாட்டம் கொண்ட கட்சிகளைப் போல் அல்லாமல், அரசை நேரடியாக எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ள வேண்டும் என்னும் இனமான, உரமான கொள்கையை உடையது. இதன் வலிமை நாளுக்கு நாள் வளர்ந்து வருவது. எனவே, இதை எவ்வாறாயினும் ஒடுக்கி விட வேண்டும் என்று இராசீவ் அரசு நினைப்பதில் வியப்பில்லை. அதற்காக, ஒரு கால கட்டத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது. அதற்கு நல்ல சூழலாக அண்மையில் தமிழகத்தில் சில குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகள் நடந்ததை அடிப்படையாகக் கொண்டு, அதற்குப் பின்னணியாக நாமும் நம்மைச் சார்ந்த தொண்டர்களும் இருக்க வேண்டும் என்று கருதி, நம்மைக் கடந்த பதினைந்து இருபது நாள்களாகக் கடுமையான உசாவல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், நடுவண் ஒற்றுத்துறையைக் கொண்டு ஆளாக்கி வருவதாக நாம் கருதவேண்டி உள்ளது.

இத்தகைய அச்சுறுத்தல்களுக்கெல்லாம் நாம் நம்மை அணியப் படுத்திக் கொண்டவர்களே என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். எனவே நாம் இதற்கெல்லாம் அஞ்சப் போவதில்லை. மாறாக, நாம் நம் கொள்கையில் இன்னும் வலிவுடையவர்களாகவே இயங்கப் போகிறோம் என்பது நம் வரலாறு போன்ற உண்மையும் உறுதியும் வாய்ந்ததாகும்!

இறுதியாக இராசீவ் அரசுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறோம். தமிழ்மொழியும், தமிழ் இனமும், தமிழ்நாடும் தில்லியின் அரசியல் வல்லாண்மையிலிருந்து விடுபடும் வரை நம் நேர்மையான போராட்டம் ஓய்ப்போவதில்லை என்பதை இன்றிருந்து நாளை அழியப் போகும் இராசீவும் அவரின் அடிவருடித் தமிழர்களும் ஆட்சி அதிகாரக் கும்பல்களும் தெளிவாக உணர்ந்து கொள்வார்களாக.

வெல்க மக்கள் போராட்டம்! விளைக மக்கள் விடுதலைப் புரட்சி! 0

---

## தமிழர்கள் நம்பிக்கையில்லாதவர்கள்!

உலகில் தொன்மை வாய்ந்த நாகரிகங்களான சுமேரியா, பாபிலோனிய நாகரிகம், கிரேக்க நாகரிகங்கள் எல்லாம் அழிந்து விட்டன. அதுபோலத் திராவிட நாகரிகம் இன்னும் அழிய வில்லையென்றால் அதற்கான அடிப்படைக் காரணம் தமிழ் மொழிக்கு உரிய வல்லமை ஒன்றுதான்.

உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில் 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசப்படங்கள் மாறிக் கொண்டுதான் உள்ளன. அஃது இயற்கை. இந்தியாவுக்கும் அது பொருந்தும்.

உலகத்திலுள்ள இசுலாமியர்கள் எல்லாம் சேர்ந்து PANISLAM என்னும் அமைப்பை வைத்திருக்கிறார்கள். உலகத்தின் எந்த மூலையில் இசுலாமியர்களுக்குத் தாக்கம் நேர்ந்தாலும், அவர்கள் அதை உலக ஒன்றிய நாடுகள் மன்றத்திற்கே எடுத்துக் செல்லும் வல்லமையைப் பெற்றிருக்கிறார்கள்.

அதுபோல உலகத்தில் பல நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற அமெரிக்கர்கள் எல்லாம் சேர்ந்து PAN AMERIEAN என்னும் இயக்கத்தை நடத்துகிறார்கள். அதுபோலத் தமிழர்கள் என்னும் நிலையில் நாம் எவ்வளவுதான் வரலாற்றுப் பின்னணியில் இருந்தாலும் நம்மால் அமைக்க முடிந்ததா, எதிர்காலத்தில் முடியுமா, என்று பாருங்கள்!

தமிழர்கள் தன்னம்பிக்கை இல்லாதவர்கள். இல்லாதவன் பிறரை நம்ப மாட்டான். ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை இல்லாதவர்கள் ஒற்றுமையாய் வாழமுடியாது. ஒற்றுமையாய் வாழத் தெரியாதவர்களை ஒன்று சேர்க்க முடியாது.

— பொறியாளர். பொ. குமாரசாமி

நன்றி 'பெரியாரியக்கம்' — மார் — ஏப்: 88

# ஒன்றுக! ஒன்றுக! உடனே ஒன்றுக.

பாவலர் - சின்னப்பனார்.

கொன்றே குவித்திடு கின்றான் தமிழரைக்
கொடியன் இனவெறி இராசீவ்தான் — பெருங்
கயவன் இந்த இராசீவ்தான் — மாக்
கரிசன் உலகில் இராசீவ் தான்.

அடடா! அந்தச் சிங்கள வனைவிட
அளவில் மிஞ்சி விட்டனே — அழிப்பு
அட்டூ ழியத்தில் இவன்தானே — நம்மின
அரத்தம் குடிப்பதி லுந்தானே!

இவன்செயல் தவறென உலகம் சொல்லியும்
ஏற்றுக் கொள்ளா திருக்கின்றான் — படை
இங்கு திரும்பா தென்கின்றான் — தமிழ்
இனத்தை அழித்திட எண்ணித்தான்!

ஈழம் தனிலிவன் படைசெய் அழிம்பை
எண்ணில் நெஞ்சம் நெருப்புத்தான் — மிகுந்து
ஏறுமே குருதியில் கொதிப்புத்தான் — ஆகுது
எம்மிரு கண்கள் சிவப்புத்தான்.

கண்கள் சிவந்தும் சினந்தும் பயனென்ன?
கட்டப் பட்ட கைகளிலே — நாம்
கருவிகள் ஏந்திட வகையிலையே — நம்
கையில் ஆட்சி முறையிலையே!

நம்மின ஆட்சி இங்கிருந் திருந்தால்
நடந்திடு மாயிவன் வாலாட்டம்? — உடன்
எடுத்திட மாட்டா னுவோட்டம்? — இன்னும்
இருந்திடு மாயிவன் திமிரேற்றம்?

உடன்பிறந் தோரை அழிப்பதைக் கண்டும்
உதவா இந்நிலை நமக்கேன்தான்? — அடிமை
உலகில் நாம்தாம் அதனால்தான் — இதை
உணர்ந்தும் ஒற்றுமை இலையேதான்!

உலகில் ஏனெனக் கேட்பார் அற்ற
இனம்நாம் இந்நிலை எதனாலே? — ஆட்சி
உரிமையை இழந்தோம் அதனாலே — அதை
உடன்பெற வேண்டும் இந்நாளே!

தனக்கென ஓரர சில்லா இனந்தான்
தரையில் அழியும் மெய்யேதான் — இதற்குச்
சான்று நம்மின நிலையேதான் — அழிவைத்
தடுப்பது விடுதலை யேதான்தான்.

ஒன்றுக! ஒன்றுக! உடனே ஒன்றுக!
உலகத் தமிழினத் தீர்நீரே — விடுதலை
உடன்பெற் றிடமுனைந் திடுவீரே — நமதர
சுரிமையை நிலைநாட் டிடுவீரே.

---

**உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 22**

**தன்னைப் பிறர்க்கும், பிறரைத் தனக்கும் அடிமைப் படுத்திக் கொள்ளாத உணர்வு எதுவோ, அதுவே அறிவு ஆகும்.**

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண் - 104.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5

TN/MS (C) 657